# லலிதாவின் ஆயிரம் நாமத் தமிழ்மாலை

வரத்திருமகள் மூலம் அன்னை அருளியது

காணிக்கை

அன்று ஜயதேவரின் அஷ்டபதியை தமிழில் கீத கோவிந்தம் என்று மொழி பெயர்த்து அதனை அச்சுக்கு அனுப்பாமல், கண்ணனின் பக்தர்கள் மட்டுமே படிக்க வைத்த என் தாய் வழி தாத்தா திரு.சங்கு சுப்ரமணியன் அவர்களுக்கு இந்த புத்தகத்தை காணிக்கையாக்குகிறேன்.

# முன்னுரை

அன்னையின் நாமங்களை வடமொழியில் பாட ஆரம்பித்த பொழுது அதன் பொருளை உணர்ந்து கொள்ள ஆவல் பிறந்தது. அப்போது ஆங்கில மொழியாக்கம் உள்ள வலைதளம் இருப்பது தெரிய வந்தது. ஒவ்வொரு பெயரின் பொருளையும் அந்த வலைதளம் மூலம் படிக்கும் பொழுதும், அதற்கான தமிழாக்க வார்த்தைகளை அன்னை என் நெஞ்சினில் பிறக்கச் செய்தாள். ஆங்காங்கே கற்பனையும் கலந்திடச் செய்தாள். கூடுமானவரை எதுகையும் மோனையும் இருக்கச் செய்தாள்.

இரண்டு நவராத்திரிகளுக்கு முன்னால் இதனை எழுத வைத்தாள். உற்றாரும் உறவினரும். நண்பரும் உடன் இருக்க வைத்தாள். அவர்கள் கொடுத்த ஊக்கத்தில் சென்ற ஆண்டு நவராத்திரிக்கு நான் சென்ற இல்லங்களில் 50 முதல் 100 வரையிலான நாமங்களை ஒவ்வொரு இல்லத்திலும் படிக்க வைத்தாள். இந்த ஆண்டு இதை கையடக்க புத்தக வடிவமாய் உருவாக்கி விட்டாள்.
பிரசுரத்திற்கு வந்தாலும் இந்த புத்தகம் விலைக்கு இல்லை. அன்னையின் நாமங்களை நம் தாய் மொழியில் படிக்க விரும்புவோரின் இல்லங்களை அலங்கரிக்கும் ஒரு ஆபரணமாய் இது இருப்பதே அவளின் விருப்பம்.

வடமொழியை நான் கற்றதில்லை. தமிழ் மொழியைக் கற்றாலும் அது கை மண் அளவே. இதில் சொல் குற்றமும், பொருள் குற்றமும், இலக்கணக் குற்றமும், இன்னும் பல பிழைகள் இருந்தாலும் குழந்தைகளை தாய் மன்னிப்பது போல லலிதாம்பிகைத் தாய் மன்னிப்பாள் என்ற நம்பிக்கையில் எழுதியுள்ளேன்.

வரத்திருமகள்

# லலிதாவின் ஆயிரம் நாமத் தமிழ்மாலை

1-10
அனைவரின் அன்னையாய் அருளைச் சொரிபவளே
வினைகளை அகற்றி வென்று காப்பவளே
சிங்கம் என்னும் சிம்மாசனத்தில் ஏறியவளே
பொங்கும் தீயில் புலரும் ஞான ஒளியே
மனமுவந்து தேவரை மலர்ந்து காப்பவளே
கனலாய் ஆயிரம் கதிரவன்போல் ஒளிர்பவளே
கரங்கள் நான்கு கலையாகக் கொண்டவளே
கரத்தில் அன்பைக் கயிறாய்க் கொண்டவளே
உருவத்தில் உறுதியாய் உக்கிரம் கொண்டவளே
கரும்பை வில்லாக்கி கரத்தில் கொண்டவளே!

11-20
புலன்கள் ஐந்தும் புதைந்து பொழிபவளே
உலகை உள்சுமந்து உதிக்கும் சிவப்புருவே
சிகையில் சம்பகம் சிறகாய்ச் சுமந்தவளே
வகையாய் கிரீடம் வைரமாய் மின்னுபவளே
எட்டாம் பிறையென எழிலொளி நெற்றியே
வட்ட நிலவின் வடுவான திலகமே
முகத்தில் இமைகளால் முறுவல் செய்பவளே
முகத்தில் நீந்திடும் மோனமீன்கள் கொண்டவளே
நாசியின் சம்பகமே நாற்திசையும் மணப்பவளே
நாசியின் வளையத்தால் நட்சத்திரஒளி வெல்பவளே!

21-30
காதுகள் இரண்டும் கதம்பமாய் கொஞ்சுமே
காதுகளில் சந்திரசூரியன் கைவல்யம் பேசுமே
பதுமராகக்  கண்ணாடியே பதுமையின் கன்னமே
புதுப்பவழ அழகாய் பூத்திடும் இதழ்களே
முத்துப் பற்களே முளைத்த ஞானமே
பத்துதிக்கும் தாம்பூலம் பரவலாய் வீசுமே
இன்னிசை வீணையினும்  இனிக்கும் பேச்சே
மன்மதன் நீந்திவிட  மயக்கும் புன்னகையே
முகவாயின் பேரழகை முந்திவிட ஏதுமில்லையே
தகதகவென  கழுத்தில் தாலியும் தொங்குமே!

31-40
அங்கியில் தங்கம் அணியாய் அமர்ந்திடுமே
பொங்கிய முத்தும் பொன்னும் தவழ்ந்திடுமே
தாங்கிய முலைகள் தரணியை வாழ்த்திடுமே
கொங்கை இரண்டும் கோலமாய் அமைந்திடுமே
இருப்பது தெரியாது இடையும் நெளிந்திடுமே
பொறுப்பாய் மார்பைப் பூமியில் சுமந்திடுமே
சிறுத்த இடையும் சிவப்பாடையில் மின்னிடுமே
உருவாய் மணிகள் ஊஞ்சலாடிக் கொஞ்சிடுமே
எழிலாய் ஈசனறிய இருதொடை யிருந்திடுமே
விழிக்கு முட்டிகள் வீசிடும் பொன்கிரீடமே!

41-50
சிறுஅம்பாய் வளைந்து சிலிர்த்திடும் கால்களே
உருண்டைக் கணுக்காலில் உன்னதம் கொஞ்சுமே
ஆமையின் முதுகாய் அழகான பாதமே
ஊமை என் மனஇருளை ஒழித்திடும் நக ஒளியே
தாமரை அழகைத் தாண்டிடும் திருவடிகளே
கோமளக் கொலுசில் கோமேதகம் சிணுங்குமே
அன்னம் போலவே அமைதியான நடையே
எண்ணத்தில் அடங்காத எழிலான உயர்வே
செம்மையான விடியலின் செழிப்பான உருவமே
எம்மைக் காத்திடும் எழிலான கால்களே!

51-60
ஆபரணங்கள் அனைத்தும் அணிந்த அழகே
தாபங்கள் தீர்த்திட தலைவன்மடி அமர்ந்தவளே
சிவனைச் சேர்ந்து சிவமாய் மாறியவளே
அவனும் மதித்து அவளைப் பணிவானே
மேருமலை உச்சத்தின் மீதிருந்துக் காப்பவளே
ஊரும் திருநகரம் உள்ளிருந்துக் காப்பவளே
பாச மன இல்லத்தில் பரிந்துத் தங்குபவளே
ஆசனமாய் ஐபிரம்மத்தில் அமர்ந்து அருள்பவளே
வதனமாய் தாமரையில் வசித்துக் காப்பவளே
கதம்ப வனத்துக் காமாட்சி ஆனவளே!

61-70
அமிர்தக் கடலின் ஆழத்தில் இருப்பவளே
நிமிர்ந்த பார்வையில் நிம்மதி தருபவளே
மனிதரின் ஆசைகளை மாறாது அருள்பவளே
முனிவரும் தேவரும்  முதற்கண் வழிபடுகுணமே
பண்டாசுரனை அழித்திடப் படைகள் சூழ்ந்தவளே
கண்கவர் செல்வம்தரும் களிறுகள் சூழ்ந்தவளே
கோடிக் கணக்கில்  குதிரைகள் சூழ்ந்தவளே
ஆடிவரும் இரதத்தில் அணிவகுப்பாய்
திருச்சக்கரமே!
இசைதெய்வம் மந்த்ரினி இனிதே ஏறிவருவாளே
அசையும் எருமையில் ஆடிவரும் வராஹியே!

71-80
அக்னிக் கோட்டையில் அழகாய் அமர்ந்தவளே
சக்தியால் பண்டாசுரன் சதிராடிய தேவியே
நித்திய தேவதையை நித்தம் இரசிப்பவளே
பத்திரமாய் அசுரனைப் பாலதேவியாய் அழித்தவளே
விசாங்கனை அழித்த வீரமந்த்ரினி விரும்பியவளே
அசாத்தியவராஹி விசுகா அழித்திட மகிழ்ந்தவளே
காமத்தலைவன் காதலில் கணேசன் பெற்றவளே
தாமதமின்றி கணேசன் தடையகற்ற மகிழ்ந்தவளே
மகத்தான அம்புகளை மாற்றித் தகர்த்தவளே
நகநுனியில் அவதாரங்கள் நாராயணனை
எடுக்கவைத்தவளே!

81-90
அசுரப்படையை மகாபசுபத அம்பினால்
அழித்தவளே
அசுரனைக் காமேஸ்வர அம்பினால் அழித்தவளே
தேவரும் பிரம்மனும் வணங்கும் தேவியே
தேவனாம் மன்மதனைக் காத்த தேவியே
சத்திய வதனமும் சாந்தமான தாமரையே
மத்தியத்தில் மையமாய் மயக்கும் எழிலே
இடைமுதல்  கிடைக்கும்  இனிதான சக்தியே
விடையாய் தெரியும் வீரிய மூலமந்திரமே
மூன்று மந்திரங்களை முற்றிலும் அறிந்தவளே
வென்று அமிர்தமாய் வீற்றிருக்கும் சக்தியே!

91-100
நற்குலம் காத்து நலத்தைத் தருபவளே
நற்குலத்தில் பிறந்தவரை நாடிக் காப்பவளே
எங்கும் வணங்கிட ஏற்றம் மிகுந்தவளே
சங்கமித்து சிவனோடு சக்தியைப் பொழிவாளே
புத்தியை இணைந்தப் பூரண சக்தியே
புத்தியையும் கடந்தப் பொலிவானப் பொருளே
சித்தியும் வணங்கிடும் சிவமான சக்தியே
வித்தையால் வணங்கிட விசித்திரச் சக்கரமே
மூலாதார நடுவின் முழுமுதற்ப் பொருளே
காலச்சக்கர சுழற்சியில் காத்திடும் அருளே!

101-110
மணிபூரக சக்கரத்தில் மலர்ந்த மங்கையே
பிணியாய் நெருக்கும் பீதிகளை விடுவிப்பவளே
நெற்றிக் கண்ணாய் நேர்த்தியாய் அமர்ந்தவளே
முற்றியக் குரோதத்தை முழுதாய் அழிப்பவளே
ஆயிரமிதழ் தாமரையில் அழகாய் அமர்ந்தவளே
வாயினில் தேனமுதம் வழங்கிடும் சக்தியே
வருடும் மின்னலாய் வளர்மேனி மினுக்குமே
ஆறு சக்கரதின்மேல் அழகாய் இருப்பவளே
வழிபாடு செய்திட வாழவைக்கும் சக்தியே
வழிதனை காட்டிடும் வையகத்தின் மூலமே!

111-120
தாமரைத் தண்டெனத் தளிராய் நிற்பவளே
காவலாய் உயிரைக் கருவினில் சேர்ப்பவளே
நினைத்தால் நெஞ்சத்து நினைவில் தெரிபவளே
வினைகளை அகற்ற வினயமான ஆயுதமே
நன்மை நாள்தோறும் நாடுவோர்க் களிப்பவளே
நன்மையின் வடிவமாய் நாற்திசையில் நின்றவளே
நற்பெரும் நற்கதியும் நாயகி தருவாளே
பொற்பாதம் பணிவோரைப் புவியினில் காப்பவளே
பக்தருக்குத் தெரிந்திடும் பார்வதி தேவியே
பக்திக்குப் பணிந்து பக்தரைக் காப்பவளே!

121-130
அச்சத்தை விரட்டும் அம்பையாய் ஆனவளே
உச்சத்தில் சம்புவை உளமார மணந்தவளே
ஒன்பது நாளும் உற்சவமாய்த் தொழப்படுபவளே
உன்னத சிவனை உருகிக் கலந்தவளே
சங்கடங்கள் நீக்கியே சக்தியும் தருபவளே
சங்கரனை இணைந்த சங்கரித் தாயே
மகிழ்வை அளிக்கும் மகேஸ்வரித் தாயே
நெகிழ்ந்து நாயகனை நித்தமும் இணைந்தவளே
துல்லிய நிலவாய் தோற்றம் கொண்டவளே
மெல்லிய இடையை மேனியில் உடையவளே!

131-140
சாந்தமே உருவாய் சங்கடம் தீர்ப்பவளே
பாந்தமாய் தனித்துப் பாதையைக் காட்டுபவளே
வடுவில்லா மருவில்லா வதனம் உடையவளே
விடுவித்து பற்றின்றி வெற்றியை அடைந்தவளே
கள்ளமின்றித் தெளிவாய்க் காட்சி தருபவளே
உள்ளத்தில் என்றும் உறுதியை உடையவளே
உருவமே இல்லாது உள்ளுக்குள் தெரிபவளே
கருத்து குழம்பினால் காணாது மறைபவளே
வார்த்தைக்கு எட்டாத வசீகரம் உடையவளே
பார்வதியாய் பிரியாது பாதையில் தெரிபவளே!

141-150
அமைதியின் உருவாய் அன்பாய் நிற்பவளே
உமையவள் விருப்பங்கள் ஒன்றும் இல்லாதவளே
அழிவே இல்லாது அண்டத்தைக் காப்பவளே
ஒழிவே இன்றி ஊழ்வினை அறுத்தவளே
மாற்றங்கள் இல்லாது மனத்தில் நின்றவளே
ஏற்றமாய் அண்டத்தின் எல்லையைக் கடந்தவளே
தனித்து நின்று தரணியைக் காப்பவளே
பனிபோல் தூய்மையாய் பரவசம் தருபவளே
நிறைவாய் அறிவை நித்தம் பெற்றவளே
குறைகள் அறவே கூறிட முடியாதவளே!

151-160
என்றும் தொடர்ந்து எங்கும் நிறைந்தவளே
என்றும் காரணம் இல்லாது இருப்பவளே
என்றும் களங்கமே இல்லாது நிறைபவளே
என்றும் முடிவே இல்லாத தொடக்கமே
என்றும் அடங்காத இயல்பான ஆளுமையே
என்றும் ஆசைகள் இல்லாத அன்னையே
என்றும் ஆசைகளை எடுத்து எறிபவளே
என்றும் மூடநம்பிக்கை இழந்து நிற்பவளே
என்றும் மூடநம்பிக்கை எளிதில் முறிப்பவளே
என்றும் கவலைகள் இல்லாது நிற்பவளே!

161-170
அகந்தை இல்லாத அம்பிகை அவளே
அகத்தில் மோகம் அறவே இல்லாதவளே
மோகத்தைக் கொன்ற மூகாம்பிகை அவளே
சோகத்தைத் தந்திடும் சுயநலம் இல்லாதவளே
சுயநலம் அழித்து சுகத்தைத் தருபவளே
பயமின்றி பகையின்றி பாவங்கள் இல்லாதாவளே
பாவங்கள் போக்கிடும் பைரவியும் அவளே
கோபங்கள் இல்லாத குமாரியும் அவளே
சினத்தை அழித்திடும் சிங்காரி அவளே
மனதில் பேராசை மறைந்த மங்கையே!

171-180
அவதிதரும் பேராசை அழித்து அருள்பவளே
யுவதியாம் அவளுள் யூகங்கள் இல்லாதவளே
சந்தேகம் அழித்து சங்கடம் தீர்ப்பவளே
வந்திங்கு பிறவாதிருக்க வரங்களைத் பெற்றவளே
இங்கெனக்கு பிறவாவரம் ஈந்துக் காப்பவளே
மங்கையவள் விரும்பாததை மனத்தால்
செய்யாதவளே
எதனாலும் பாதிக்காத எழிலான சக்தியே
விதவிதமான பேதங்களில்லா விசாலமான சக்தியே
எல்லாம் இணைக்கும் ஈஸ்வரியும் நீயே
உல்லாசமாய் அழிவில்லா உருவமும் நீயே!

181-190
இறப்பென்னும் அச்சத்தை இல்லாது செய்பவளே
பிறப்பிலே வேலைகளை பிறழாது நீக்கியவளே
மற்றவர் உதவியை மறந்தும் நாடாதவளே
மற்றொரு பொருளுடன் மாறாத ஒப்பற்றவளே
கருமையான கூந்தலை காரிகை கொண்டாளே
உருவத்தை அழித்திட ஒருவராலும் முடியாதே
தனக்கு இலக்குத்  தானே வரைந்தவளே
எனக்கும் உனக்கும் எளிதில் தெரியாதவளே
அவளை நெருங்குவது அரிதிலும் அரிதே
அவளும் சிறுமியாய் அருகில் வருவாளே!

191-200
துயரத்தை அவளும் தொலைவில் வைப்பவளே
தயங்காது மகிழ்வை தந்திடும் தாயே
அகிலத்தில் கெடுமனிதர்  அண்டாது காப்பவளே
அகிலத்தில் கேடுகளை அறவே ஒழிப்பவளே
தன்னுள் கெடுதலின்றித்  தாரணிக் காப்பவளே
தன்னுள் உணர்ந்து தாரணி அறிந்தவளே
அளவில்லாக்  கருணை அன்னையும் கொண்டாளே
அளவில்லா ஒப்புதல் அவளும் கொண்டாளே
அளவில்லா சக்தியை அவளும் கொண்டாளே
அளவில்லா நல்லருளை அவளும் சொரிவாளே!

201-210
நற்பாதை வழிகாட்டி நம்மை நடத்துபவளே
பொற்பாதம் உடைய புவியின் பராசக்தியே
எங்கும் எதிலும் இருந்து காப்பவளே
பொங்கும் மந்திரத்தில் பொலிவாய் ஒளிர்பவளே
யந்திர சக்தியால் யாவும் செய்பவளே
தந்திர உருவில் தரணியைக்  காப்பவளே
எண்ணமும் செயலுமாய் எழுந்து நிற்பவளே
வண்ணமாய் ஈசனுடன் வையகம் காப்பவளே
மகாதேவன் அருகில் மையல் கொண்டவளே
மகாலட்சுமி அன்னையாய் மகத்துவம்
வாய்ந்தவளே!

211-220
சிவனுக்குப் பிரியமான சிவகாமி அன்னையே
அவனியில் பெரிதான அதிசய உருவமே
மகாமுனிகள் பூஜிக்க மகத்துவம் வாய்ந்தவளே
மகாபாவத்தை வேரோடு மண்ணில் அழிப்பவளே
மறைவில் ஒளிந்து மாயையாய்க் காப்பவளே
இறையாய் அறிவில் இணைந்து ஒளிர்பவளே
பலமான சக்தியை பக்தியில் அளிப்பாளே
சுலபமாய் மகிழ்வை சுபமாய்த் தருவாளே
சுகத்தை அளவுடன் சுவைத்து வாழ்பவளே
முகத்தில் செல்வமுடன் முறுவல் கொண்டவளே!

221-230
வீரத்தில் சிறந்த வீராங்கனை அன்னையே
பூரணமாய் பலமான பூவரசியும் அவளே
புத்தியில் சிறந்து புவனம் காப்பவளே
சித்தியில் சிறந்து சிங்காரம் சேர்ப்பவளே
யோகிகளின் ஈஸ்வரியாய் யுகங்கள் கடந்தவளே
ஆகிவந்த தந்திரங்கள் அனைத்தும் அறிந்தவளே
மந்திரங்கள் அனைத்திற்கும் மகிமை சேர்ப்பவளே
தந்திரமாய் இயந்திரங்களை தடையின்றி
இயக்குபவளே
மகத்துவம் கொண்ட மகாசனம் உடையவளே
சகலரும் யாகத்தில் சரணடையக் கூடியவளே!

231-240
மகத்துவமான பைரவர்கள் மங்களமுடன்
பணிவாரே
தகதகவென்று ஈசனின் தாண்டவம் காண்பவளே
காமேஸ்வரனின் அன்பில் களிக்கும் நாயகியே
தாமே அனைத்துமாகி தந்திரமாய் உணர்த்துபவளே
அறுபத்திநான்கு அர்ப்பணங்களால் ஆராதிக்கப்
படுபவளே
அறுபத்திநான்கு வகைகளும் அவளில் அடங்குமே
ஒன்பது சக்கரத்தில் ஒய்யாரமாய் வணங்குவோமே
அன்பால் மனுவும் ஆராதித்த வித்யாவே
சந்திரன் வணங்கும் சரித்திர நாயகியே!
சந்திர மண்டலநடுவில் சத்தியமாய் நிற்பவளே

241-250
அழகின் உருவாய் அமைந்த அன்னையே
அழகிய முறுவல் அணிந்த முகமே
வகிட்டில் சந்திர வளையம் அணிந்தவளே
அகிலத்தின் பொருள் அனைத்திற்கும் அரசியே
விலையில்லாத் திருசக்கர வீரியம் பெற்றவளே
மலையரசன் மடியில் மகளாய்த் தவழ்ந்தவளே
தாமரை போன்ற தளிர்விழி உடையவளே
தாமரை இரத்தின தகத்தகப்பாய் ஒளிர்பவளே
ஐந்து கடவுள்களிலும் அமர்ந்த சக்தியே
ஐந்து கடவுள்களுக்கும் ஆன்மா அவளே!

251-260
காரியங்கள் யாவிற்கும் காரண கர்த்தாவே
வாரியே ஆனந்தம் வழங்கிடும் தாயே
புத்திக்கு அறிவியலைப் புரிய வைப்பவளே
சித்தியில் தியானிக்கும் சிந்தையும் அவளே
அதருமம் தருமம் அப்பாற்பட்டு நிலைப்பவளே
விதவிதமான உருவத்தில் விளையாடும் அண்டமே
எப்போதும் விழித்திருக்கும் ஏகாம்பர ஈஸ்வரியே
சிப்பிக்குள் முத்தாய் சிந்தையின் கனவே
அணுவுக்குள் அணுவாய் அண்டத்தில் நிறைந்தவளே
அனுபவிக்கும் உணர்வுக்குள் ஆழ்ந்த உறக்கமே!

261-270
விசாலமான உலகை விழித்தபடி காப்பவளே
அசாத்தியமாய் உலவும் ஆழ்நிலைத் தியானமே
அனைத்தும் கடந்து அகிலம் ஆள்பவளே
வினைவழி உயிரினத்தை விளையாட வைப்பவளே
உருவத்தில் பிரம்மமாய் உயர்ந்து விளங்குபவளே
அருமையாய் அனைவரையும் அணைத்துக்
காப்பவளே
மாயப்பசுவாய் மனதை மயக்கிடும் தாயே
தீயவை அழித்திடும் தில்லை அரசியே
மோனத்தின் நிலையான முக்தியின் உருவமே
காணக் கிடைக்காத கருணை தெய்வமே!

271-280
இனிதாய்க் காத்திடும் ஈஸ்வரி தாயே
மனிதனைக் காத்திடும் மகேசன் மனைவியே
வந்து கருணை வாரி அளிப்பவளே
ஐந்து கடமைகளை அஞ்சாது புரிபவளே
சூரிய மண்டலத்தில் சுடராய் நிற்பவளே
வீரிய பைரவனின் வினயமான தோழியே
அறிவும் தனமும் அழகாய்க் கொண்டவளே
விரியும் தாமரையில் வீற்றுப் பொழிபவளே
பொன்னும் பொருளும் பொலிவாய் பூண்டவளே
அண்ணன் திருமாலின் அழகான சகோதரியே!

281-290
இமையின் அசைவில் இவ்வுலகை உருவாக்குபவளே
உமைக்கு ஆயிரம் உன்னத முகங்களே
ஆயிரம் கண்கள் அருளைப் பொழியுமே
ஆயிரம் பாதங்கள் அண்டம் காக்குமே
அனைத்து உயிரும் அன்னையிடம் உருவாகுமே
புனைந்த சமுதாயம் புதியதாய் பிறக்குமே
அதிகாரம் வேதத்தின் அடிப்படையில் உருவாகுமே
விதிப்படி பரிகாரம் வினயமாய் நடக்குமே
பாததூளி சிந்தூரமாய் பறந்து அலங்கரிக்குமே
வேதத்தின் நடுநாயகமாய் வென்றிடும் முத்தே!

291-300
தனமும் தானமும் தந்திடும் தாயே
சினத்தைக் களைந்த சித்திர பூரணமே
கவனமாய் களிப்புற்று கண்ணில் இரசிப்பவளே
புவனம் ஆளும் பொலிவான ஈஸ்வரியே
ஜோதியாய் அனைவரின் ஜொலிக்கும் அன்னையே
ஆதியும் இன்றி அந்தமும் இல்லாதவளே
மும்மூர்த்தியும் இவளை முதற்கண் சேவிக்க
சிம்மத்தில் அமர்ந்து சிரம்காக்கும் நாரயணியே
இசையின் வடிவாய் இனிமை தருபவளே
அசையும் வடிவம் அற்று அருள்பவளே!

301-310
ஒலிவடிவில் மந்திரமாய் ஒயிலாய் ஆனவளே
பொலிவான அடக்கம் புதைந்து இருப்பவளே
இதயத்தில் ஒளிந்து இனிமை தருபவளே
இதமில்லா உனர்வுகள் இல்லாது போனவளே
அரசனும் வணங்கி அவளைப் பணிவானே
அரசியாய் காமனுக்கு அவளும் ஆனாளே
அழியாத ஆனந்தம் அவளும் தருவாளே
விழிகள் இரண்டும் விரிந்த தாமரையே
சிவந்த நிறத்தினால் சிவனும் சிவந்தானே
உவந்து பக்தருடன்   உமையும் களிப்பாளே!

311-320
தடையின்றி அருளைத் தயங்காது தருபவளே
இடையில் தங்கம் இனிதாய் அணிந்தவளே
இணையில்லா வளமுடன் இலக்குமி ஆனவளே
அணைக்கும் சந்திரன்போல் அழகான வதனமே
அழகில் இரதியாய் அருமையாய் சொலிப்பவளே
அழகு இரதியை அனுதினம் இரசிப்பவளே
விசுவாசமுடன் காத்து வீரம் தருபவளே
அசுரனைக் கொன்று அமைதி தருபவளே
பெண்ணின் நளினம் பெற்றுத் திகழ்பவளே
மண்ணில் காதல் மாறாது கொண்டவளே!

321-330
காதலின் உருவாய்க் காட்சி தருபவளே
காதல் கலையை கற்றுத் தருபவளே
கதம்ப மலராய் கண்ணைக் கவர்பவளே
இதமாய் அனைவருக்கும் இனிமை தருபவளே
உருவத்தில் வேராய் உலகைக் காப்பவளே
கருணை என்னும் கடலாய் ஆனவளே
கலைக்கு அரசியாய் காத்து நிற்பவளே
கலையாய் பேச்சில் கவர்ந்து இழுப்பவளே
மின்னும் பொன்னாய் மினுக்கி மயக்குபவளே
இனிக்கும் காதம்பரி எழிலாய் ஆனவளே!

331-340
வளமாய் வாழ வரங்களைத் தருபவளே
இளமை விழிகளை எழிலாய்க் கொண்டவளே
மதுவை அருந்தி மயக்கம் பெறுபவளே
புதுஉருவில் பூத்து புவனம் வென்றவளே
வேதங்கள் அறிந்த வேணியும் நின்றவளே
பாதங்கள் மலையில் பதித்து நிற்பவளே
பாங்காய் இவ்வுலகை பைங்கிளியாய்த்
தாங்குபவளே
நான்கு வேதங்களை நல்லுலகிற்கு தந்தவளே
மாயை வடிவான மதுசூதன் உருவமே
மாயை உணர்வை மங்கையும் கொண்டாளே!

341-350
உடலென்னும் மாயையை உள்ளிருந்து நடத்துபவளே
உடலுக்குத் தெய்வமாய் உணர்வு அளிப்பவளே
உறையும் உயிரையும் உடலையும் காப்பவளே
குறையும் நிறையும் குன்றாது இருப்பவளே
போற்றிடும் உயிர்கள் புலனைக் காப்பவளே
வெற்றியை வாகையாய் விரும்பிச் சூடியவளே
மாற்றங்கள் உடைய மாயையைத் துறந்தவளே
ஏற்றமுடன் எல்லோராலும் என்றும்
தொழப்படுபவளே
மாதாவாய் பக்தர்களை மகிழ்ந்து அணைப்பவளே
வாதங்களை வெல்ல வாக்கை உபயோகிப்பவளே!

351-360
கருமையான கூந்தல் கவர்ந்து இழுப்பவளே
உருவத்தில் அக்னியாய் உலகைக் காப்பவளே
அணைக்கும் கற்பகமாய் அருளைப் பொழிபவளே
பிணைக்கும் வாழ்க்கைப் பிணியை நீக்குபவளே
இல்லாத நம்பிக்கை இறுமாப்பை அழிப்பவளே
நல்ல செயல்களால் நற்கதி அளிப்பவளே
வளமான நிலவாய் வலியைப் போக்குபவளே
இளமை அழகாய் என்றும் இருப்பவளே
முனிவர்கள் அனைவராலும் முதலாய்
வணங்கப்படுபவளே!
இனிதே மெல்லிய இடையை உடையவளே

361-370
இருளை ஒழிக்கும் இனிய ஒளியே
அருளைப் பொழியும் அறிவான சுடரே
ஆதிப் பொருளாய் அண்டம் காப்பவளே
ஓதியப் பொருளே! ஒப்பற்ற அறிவே!
அறிவுக் கடலில் அலையான பிரம்மமே
அறிவுக்கும் அர்தத்திற்கும் அப்பாற் பட்டவளே
உள்ளுக்குள் அறிவை உணரச் செய்பவளே
உள்ளுக்குள் அனைத்தையும் உணர்ந்து நிற்பவளே
அனைத்து கடவுளுக்கும் ஆழ்நிலை சக்தியே
அனைத்திற்கும் இடையில் அருளாய் ஆனவளே!

371-380
வார்த்தைகளின் உருவமாய் வையத்தை ஆள்பவளே
சேர்ந்த மனக்குளத்தில் செழிப்பான அன்னமே
உன்னத காமேஸ்வரனின் உயிர் நாடியே
அன்னமாய் அனைத்தையும் அறிந்த அறிவே
காமத்தின் மூலமாய் கனமான சக்கரமே
கோமளமாய் முழுதாய் கொலுவிருக்கும் அழகே
வெற்றியின் ஆதாரமாய் வீற்றிருக்கும் அருளே
முற்றிலும் தூய்மையான முழுமுதற்ப் பொருளே
அதிகாரத்தின் ஆழமாய் அருளைப் பொழிபவளே
எதிலும் நிறைந்த எழிலான திருச்சக்கரமே!

381-390
யாகத்தின் யோகத்தில் யாமினியை அடையலாமே
வாகான மந்திரங்களின் வார்த்தையில் மகிழ்வாளே
உடனே மகிழ்ந்து உமையும் அருள்வாளே
இடபாகம் அமர்ந்து இவ்வுலகைக் காப்பாளே
தனக்கு சாட்சியாய் தானே நிற்பவளே
மனத்தாலும் உடலாலும் மாட்சிமை உடையவளே
வளங்களும் ஆறு வாசுகி  கொண்டாளே
இளமை மனத்தில் எழுந்திடும் கருணையே
நிகரே இல்லாத நித்திய உருவமே
சிகரமாய் அனைவருக்கும் சிறப்பைத் தருபவளே!

391-400
பதினாறு வடிவங்கள் பார்வதி கொண்டாளே
பதியின் இடபாகம்  பாதியாய் நின்றவளே
உயர்ந்த சக்தியை உமையும் கொண்டாளே
வியக்க வைக்கும் வெளிச்சமான அழகே
பிரபஞ்சத்தில் மிகவும் பிரபலம் ஆனவளே
அரவணைத்து காத்திடும் அகிலத்தின் ஈஸ்வரியே
எல்லாவற்றிற்கும் மூலமாய் எழிலான அரசியே
இல்லாத உருவாய் எங்கும் நிறைந்தவளே
தெரிந்தும் தெளிவாய்த் தெரியாமலும் இருப்பவளே
விரிந்து எங்கும் வியாபித்து இருப்பவளே!

401-410
புரியாத உருவங்களில் புதிராய்த் தெரிபவளே
அறிவாய் இருப்பவளே அறியாமையாய்த்
தெரிபவளே
மதியை விழிகளால் மயக்கிடும் தாமரையே
உதிக்கும் கதிரவனில் உள்ளமும் ஒளிருமே
சிவனைத் தூதாய் சிரித்தபடி அனுப்பியவளே
சிவனும் வழிபட சித்திமிகு சக்தியே
சிவனின் உருவமாய் சிவகாமி ஆனவளே
பவமாய் நலனும் பார்வதியாய் தருபவளே
சிவனோடு பிராட்டி சேர்ந்து நிற்பவளே
சிவனையே எந்நேரமும் சிந்தித்து நிற்பவளே!

411-420
நல்ல பழக்கங்களை நாளும் விரும்புபவளே
நல்லவர்கள் வழிபடும் நவரச நாயகியே
அளவிட முடியாத அதிசய உருவமே
பளபளப்பை தன்னுள் பாந்தமாய் கொண்டவளே
ஆழ்மனதிற்கும், சொல்லுக்கும் அப்பாற் பட்டவளே
ஊழ்வினை அகற்றிடும் உண்மையான அறிவே
செயலுக்குப் பின்னால் செழுமிய சக்தியே
செயல் இழந்த சோர்வுக்கும் சக்தியே
வினைகளை இழந்த விரிவான உலகமே
அனைத்திற்கும் மேலான அற்புத காயத்ரியே!

421-430
உரமான எழுத்தின் உள்ளிருக்கும் இலக்கணமே
இரவையும் பகலையும் இணைக்கும் காலமே
வித்தான உயிர்களால் வினயமாய்
வணங்கப்படுபவளே
தத்துவ ஆசனம் தாங்கிடும் தாயே
அதுவும் இதுவும் அவனியில் இருப்பவளே
அதுவாகி உன்னுள் ஆவலாய் ஒளிர்பவளே
அன்னையாய் மாறியே அன்பை பொழிபவளே
நன்மையாய் அங்கங்களின் நடுவில் நிற்பவளே
எல்லைகள் இல்லாத  எழிலான மகிமையே
உல்லாசம் குன்றாத ஊஞ்சலாடும் இளமையே!

431-440
மிதமிஞ்சிய அழகில் மினுமினுத்து ஒளிர்பவளே
இதமாய் சுழன்றிடும் இருசெவ்விழி உடையவளே
சிந்தை மயக்கிடும் சிவந்த கன்னங்களே
சந்தனம் பூசியே சருமம் மணக்குமே
பூத்திடும் சம்பகமாய் புவனம் காப்பவளே
காத்திடும் அறிவே கருணை பொழியுமே
மிருதுவான தேகமும் மிதமாய்க் கொண்டவளே
கருத்தின் ஒளியாய் கலந்த கருவே
குலத்தைக் காக்கும் குங்கும நாயகியே
புலனும் அறியாத புதிரான குண்டலினியே!

441-450
சித்தர்களும் கும்பிடும் சிவப்பு சக்தியே
முத்தான பிள்ளைகளை முறுவலுடன் பெற்றவளே
மகிழ்வின் நிறைவாய் மங்களம் தருபவளே
அகிலத்தில் நிறைந்த ஆரோக்கியம் ஆனவளே
மதிக்க வைக்கும் மதியாய் ஆனவளே
துதிக்க வைக்கும் துர்க்கை வீரமே
சாந்தமாய் உலகின் சங்கடம் தீர்ப்பவளே
பாந்தமாய் அனுதினம் பரவசம் தருபவளே
காந்தியுடன் இருளின் கருமை போக்குபவளே
மாந்தரைக் காத்திடும் மலையரசன் மகளே!

451-460
தடைகள் அகற்றி தரணியைக் காப்பவளே
விடையாய் மனதில் விரிந்து ஒளிர்பவளே
மூன்று விழிகள் முகத்தில் உடையவளே
தோன்றிய விழியால் தொலைவில் காப்பவளே
மாலைகள் அணிந்த மங்கையாய் நிற்பவளே
சோலையில் அன்னம் சூழ்ந்திட நிற்பவளே
அன்னையாய் உலகிற்கு அன்பைப் பொழிபவளே
மன்னரின் மகளாய் மலையில் வசிப்பவளே
அமைதியின் வடிவாய் அண்டம் நிறைந்தவளே
உமையும் இமையும் உருவான நளினமே!

461-470
இமைகள் காக்கும் எழிலான புருவமே
சுமைகள் நீக்கிடும் சுகமான சுடரே
தேவர்கள் அனைவருக்கும் தேவியவள் அரசியே
பாவத்தை போக்கிடும் பார்வதி அன்னையே
என்றும் அழியாத எழிலான காந்தியே
என்னுள் உணர்வுகள் எழுந்திட செய்பவளே
அணுவுக்குள் அணுவாய் அமர்ந்த அருளே
அணுகாதவரும் அறிந்திடும் அழகாய் ஒளிர்பவளே
ஒருபாதி சிவனுக்கு உமையாய் ஆனவளே
வருடங்கள் கூடிட வசீகரம் கொண்டவளே!

471-480
சித்தரின் தேவியாய் சிவனின் பாதியே
சித்தரின் வித்தையான சிவகாமி அன்னையே
தாயாய் சித்தரை தரணியில் காப்பவளே
வாயால் பாடிட வையகத்தில் பிரபலமே
பதினாறு இதழுடன் பதுமையான தாமரையே
மதியை சற்றே மயக்கிடும் சிவப்பே
நெற்றியில் கண்ணுடன் நேர்மை உடையவளே
வெற்றியைத் தந்திடும் வீரவாள் கொண்டவளே
வதனம் அழகாய் வையகம் காப்பவளே
இதமான இனிப்பை இரசித்து உண்பவளே!

481-490
தோலின் உணர்விலும் துல்லியமாய் இருப்பவளே
சூலியாய் அசுரரை சுட்டெரிக்கும் பயங்கரமே
சிறப்பான சக்திகள் செழிப்பாய் சூழநிற்பவளே
இறப்பின் திசையிலும் எழுந்து அருள்பவளே
இருஆறு தாமரையில் இருந்து காப்பவளே
கருமையும் பசுமையும் கலந்து தெரிபவளே
இரண்டு முகங்கள் எழிலாய்க் கொண்டவளே
மிரண்டுவிட பற்கள் மினுமினுத் தொளிருமே
மதியைக் காத்திடும் மங்காத தியானமே
உதிரத்தில் கலந்த உயிராய் ஆனவளே!

491-500
காலத்தில் அழியாது காத்திடும் சக்தியே
மூலமாய் நெய்யரிசியை முழுதாய் நேசிப்பவளே
வரங்களைத் தந்திடும் வசந்த உருவமே
தரமான பலபெயர்கள் தாங்கிய ராகினியே
இருந்து பத்துதாமரையில் இவ்வுலகைக் காப்பவளே
முறுவலுடன் வதனங்கள் மூன்று உடையவளே
ஆயுதங்கள் பலகொண்டு அண்டம் காப்பவளே
பாயும் தெய்வங்கள் பலவும் சூழ்ந்தவளே
உடலினில் ஓடிடும் உதிரம் போன்றவளே
உடலினில் ஒன்றிடும் ஊனாய் ஆனவளே!

501-510
அரிசியுடன் வெல்லமும் அறுசுவை பிடித்தவளே
பரிசாய்க் கருணை பக்தருக்கு அளிப்பவளே
புகழுடன் லாகினி பெயரை இணைத்தவளே
உகந்த தாமரையில் உட்கார்ந்து அருள்பவளே
கோலமாய் நாற்முகம் குளிரக் கொண்டவளே
சூலம் ஏந்திய சுந்தர அம்மையே
தங்க நிறத்தில் தகதகக்கும் அழகே
பொங்கிடும் பெருமையில் பொலிவான நங்கையே
கொழுப்பிலும் கலந்த கோமேதக அழகே
விழுந்திடும் தேனை விரும்பும் மங்கையே!

511-520
சக்திகள் பலசூழ சங்கடம் தீர்ப்பவளே
சக்தியவள் தயிருடன் சாதம் விரும்புவாளே
சூலம் ஏந்திய சுந்தர காகினியே
மூலமான தாமரையில் முத்திரை பதித்தவளே
முகங்கள் ஐந்து முதன்மையாய் பெற்றவளே
அகத்தின் எலும்பிலும் ஐக்கியம் ஆனவளே
ஆயதங்கள் ஆயிரம் அனுதினம் கொண்டவளே
பாயும் சக்திகள் பாந்தமாய் சூழ்ந்தவளே
அரிசியை பயருடன் அன்னமாய் உண்பவளே
வரிசையாய் பலபெயர்கள் வாகினி கொண்டாளே!

521-530
அனைத்துக்கும் ஆதாரமான ஆஜ்ஞா சக்கரமே
வினைகளை அகற்றிடும் வெண்ணிறத் தாமரையே
முகங்கள் ஆறு முறுவலுடன் கொண்டவளே
அகமான எலும்பின் ஆழத்தில் அமர்ந்தவளே
அன்னம் போன்ற அழகுசக்தி சூழ்ந்தவளே
அன்னம் மஞ்சளுடன் அறுசுவை விரும்புபவளே
ஆழமான மனதின் ஆசைகள் காப்பவளே
வாழவைக்கும் தாமரையில் வசித்துக் காப்பவளே
வண்ணங்கள் அனைத்திலும் வசீகரமாய்
ஒளிர்பவளே
திண்ணமாய் ஆயதங்கள் திரட்டி நின்றவளே!

531-540
பொங்கும் வெண்ணிறப் பொலிவாய் இருப்பவளே
எங்கும் முகங்கள் எழிலாய் அமைந்தவளே
அனைத்து வகையான அரிசிகளை விரும்புபவளே
வினை அகற்றும் விலாசினி யாகினியே
தானமாய் பெற்றிடும் தாரக மந்திரமே
மோனமாய் உள்ளத்தில் முளைத்திடும் அறிவே
அறிவே இல்லாத அறியாமை ஆனவளே
அறிவுச் சுடராய் அமைந்து சிறப்பவளே
வேண்டிய நான்கு வேதமாய் அமைந்தவளே
வேண்டிய வழியை வேதத்திற்கு காட்டுபவளே!

541-550
எல்லாப் பொருளுக்கும் ஏற்றமாய் அமைந்தவளே
நல்ல செயல்களுக்கு நாயகியாய் இருப்பவளே
நல்ல செயல்களால் நாடப் பெறுபவளே
நல்லதை கேட்பவருக்கு நாளும் அளிப்பவளே
இந்திரன் மனைவியால் இனிதாய்
வணங்கப்படுபவளே
பந்தங்கள் அனைத்தும் பாரினில் விடுவிப்பவளே
அலைகள் போலவே அழகாய் வருபவளே
மலையரசியாய் பேரழகை மறைவில் கொண்டவளே
கல்வியை இங்கு கற்க வைப்பவளே
சொல்லிலடங்கா நிலமும் செவ்வானமும்
செய்தவளே!

551-560
நோய்கள் அனைத்தையும் நொடியில் நீக்குபவளே
சாய்த்திடும் மரணத்தை சரித்து விலக்குபவளே
வண்ணமாய் எண்ணத்தில் வளரும் முதன்மையே
எண்ணங்களுக்கு அப்பாற்பட்டு எழுந்து நிற்பவளே
கரிநாளின் களங்கத்தை கலியுகத்தில் ஒழிப்பவளே
துரிதமாய் காத்யாயினி துயரம் துடைப்பவளே
காலனை விரட்டி காத்து நிற்பாளே
கோலமாய் விஷ்ணுவும் கும்பிடும் தாயே
வெற்றிலை வாயுடன் வீரமங்கை நிற்பாளே
மற்றவர் துன்பத்தை மாற்றிடும் மாதுளையே!

561-570
விழிகள் இரண்டும் விளையாடும் மானே
வழியை மயக்கும் வசீகர மோகினியே
தனித்து விளங்கி தடைகளை நீக்குபவளே
இனிமையை வழங்கும் இதமான அன்னையே
பிறையில்லா பூரணமான பிரகாசக் கதிரவனே
நிறைவைக் கொண்ட நிதான நாயகியே
பக்தர்களின் நெஞ்சினில் பதமாய் அமர்ந்தவளே
சக்தியால் அனைத்தும் சாகசமாய் செய்பவளே
எட்டாத தெய்வமாய் எங்கும் இருப்பவளே
நட்பால் நமக்கு நல்லது செய்பவளே!

571-580
அழிவுக் காலத்திலும் அண்டம் காப்பவளே
அழிவே இல்லாத அகண்ட சக்தியே
கவனத்தின் எல்லையில் காரியமாய் ஆனவளே
அவனியின் ஆதார அறிவாய் ஆனவளே
அமிர்த பானம் ஆசையுடன் அருந்துபவளே
அமிர்தத்தில் மயங்கி அழகாய்த் தோன்றுபவளே
பட்டான வண்ணங்கள் பலவாய் உடையவளே
எட்டாத கைலாயத்தில் எழுந்தருளும் எழிலே
தாமைரத் தண்டாய்த் தளிரான கரங்களே
ஊமையாய்ப் போற்றுதற் குகந்த உமையே!

581-590
கருணைக் கடலாய்க் காட்சி தருபவளே
பெருமையுடன் அரசியாய் பேரரசை ஆள்பவளே
அறிவியலாய் ஆன்மாவுக்குள் அமர்ந்து ஆள்பவளே
அறிவுக்கு வித்தாய் ஆழமாய்ப் புதைந்தவளே
அறிவுக் கடலாய் அழகான கடவுளே
செறிவுடன் காமனும் சேவிக்கும் அம்பிகையே
பதினாறு எழுத்தாய் படித்திடும் அறிவே
மதிக்கு மூன்றாய் மாறிடும் மங்கையே
காமகோடி பீடத்தில் காமாட்சி அமர்வாளே
கோமளமாய் இலக்குமியும் கும்பிடும் தெய்வமே!

591-600
காரணமாய் சிரசில் கர்வமாய் அமர்ந்தவளே
பூரண சந்திரனாய் பொலிவுடன் ஒளிர்பவளே
நெற்றியின் அழகாய் நேர்த்தியுடன் இருப்பவளே
வெற்றியுடன் வானவில்லாய் வீற்றிடும் பொலிவே
இருதயத்தின் நடுவில் இதமாய் அமர்ந்தவளே
கருத்தைக் கவர்ந்திடும் கதிரவனின் பேரொளியே
முக்கோண வடிவில் முழுதான ஓவியமே
சிக்கென்று தக்ஷனுக்கு சிறுமியாய் பிறந்தவளே
வீரத்துடன் அசுரனை வென்று அழித்தவளே
தீரத்துடன் தக்ஷயாகத்தைத் திறம்பட அழித்தவளே!

601-610
நீண்ட விழிகள் நிதானமாக அசைந்திடுமே
பூண்டிடும் புன்சிரிப்பில் பூரிக்கும் முகமே
அறிவை புகட்டும் ஆசிரியத் திலகமே
செறிவான குணங்கள் சேர்ந்த குலவிளக்கே
அன்னை காமதேனுவாய் அனுதினம் காப்பவளே
அன்னையாய் முருகனை அள்ளி அணைப்பவளே
தேவர்களுக்கு மேலான தேவியாய் ஆனவளே
பூவரசியாய் நியாயமுடன் புவனத்தை ஆள்பவளே
வானமாய் விரிந்து வையகம் காப்பவளே
வானத்திதி மண்டலத்தில் வணங்கப் படுபவளே!

611-620
கலையின் ஆன்மாவாய் களங்கம் இல்லாதவளே
கலைகளுக்கு அரசியாய் காவியம் படைப்பவளே
காவியத்தின் நாயகியாய் காட்சி தருபவளே
ஓவியமாய் சரஸ்வதியோடு ஒருமித்த இலக்குமியே
முதன்மையாய் அனைத்திற்கும் மூலமாய்
நிற்பவளே
எதனாலும் அளவிட இயலாத சக்தியே
கண்ணுக்குத் தெரியாத கருத்தான ஆன்மாவே
மண்ணிலே என்றும் மகிமையுடன் மிஞ்சியவளே
புனிதத்தின் எல்லையின் பூரணமான பொலிவே
இனிதாய் அண்டத்தை என்றென்றும் காப்பவளே!

621-630
அழகின் அழகாய் அமைந்து விளங்குபவளே
அழகான உருவமாய் அன்னையும் இருப்பாளே
தன்னுள்ளே அடக்கமான தாமரை உருவமே
என்னுள்ளே ஒளிந்த இரகசிய தெய்வமே
தண்டனையும் தீர்ப்பும் தடையின்றி வழங்குபவளே
அண்டத்தில் மூன்றுருவாய் அமைதி அளிப்பவளே
மூன்று உலகமும் முதலாய் வணங்குமே
மூன்று உருவமும் மூர்த்தியாய் நிற்குமே
தெய்வத்திற் கெல்லாம் தெய்வமான தேவியே
ஒய்யார மூன்றெழுத்தாய் ஓங்கார ஒளியே!

631-640
தவமான நறுமணத்துடன் தாரணி காப்பவளே
சிவப்பு பொட்டணிந்த சிங்கார உருவமே
ஓமெனும் மந்திரத்தில் ஒளிந்த உமையே
பூமெத்தை மலையாக பூமியில் பிறந்தவளே
வெள்ளை மலராய் வீற்றிருக்கும் தாமரையே
உள்ளத்தால் காந்தர்வரால் உளமார
வணங்கப்படுபவளே
உலகமே உன்கருவில் உருவாகும் அதிசயமே
சலனமே இல்லாத சம்பூர்ண தங்கமே
தவறு செய்தவரை தண்டிக்கும் கண்டிப்பே
கவர்ந்திடும்  வார்த்தையை காத்து நிற்பவளே!

641-650
உள்ளத்து தியானத்தில் ஒளிந்து  தெரிபவளே
உள்ளத்தால் ஒருவராலும் ஊகிக்க முடியாதவளே
அறிவை அனைவருக்கும் அளித்துக் காப்பவளே
அறிவாய் அமைந்து அண்டம் காப்பவளே
உண்மையான உபநிடதங்கள்
உரைத்திடும் மகிமையே
உண்மையாய் நிறைந்து உற்சாகம் தருபவளே
அகத்தியரின் மனைவியும் அவளை பூஜிப்பாளே
ஜகத்தை விளையாட்டாய் ஜனிக்க செய்பவளே
கண்ணுக்குத் தெரியாமல் காட்சி தருபவளே
எண்ணத்தில் வேறுபாடு இல்லாமல் காண்பவளே!

651-660
அறிவியல் அனைத்தையும் அறிந்த அன்னையே
அறிய வேண்டிய அவசியமே இல்லாதாவளே
யோகத்தின் மூலமான யுவதியும் அவளே
யோகத்தை அறிவால் யூகிக்க வைப்பவளே
யோகத்தில் காணப்படும் யூகமான ஒளியே
யோகத்தில் ஆனந்தம் யுவதியும் கொண்டாளே
மங்காத  யுகங்களை மகேஸ்வரி அணிந்தாளே
அங்கமாய் சக்தியும் அறிவும் ஆனவளே
எல்லாமே அவளாகி எங்கும் நிறைந்தவளே
உல்லாசமாய்த் தங்கிட உகந்து இருப்பவளே!

661-670
உண்மையை எப்போதும் உள்ளத்தில் உடையவளே
எண்ணிக்கை எட்டாய் எங்கும் நிறைபவளே
அறியாமையை வெல்லும் அறிவால் ஆள்பவளே
செறிவாய் உலகை செலுத்தி சுழல்பவளே
ஒருமையில் அடங்கி ஒளிரும் தனிமையே
கருத்தும்  கண்ணும்  காதும் உணர்பவளே
எல்லாம் ஒன்றாக்கி எங்கும் நிறைபவளே
சொல்லாமல் தனித்து சோபித்து இருப்பவளே
அன்னத்தை அளிக்கும் அன்னையாய் இருப்பவளே
வண்ணமாய் எங்களுக்கு வளங்கள் தருபவளே!

671-680
வயது கூடியும் வசீகரம் கொண்டவளே
உயரிய பிரமத்தின் உருவமாய் ஆனவளே
பேச வைத்திடும் பெரிய உருவமே
ஈசனின் மனைவியாய் இனிமை தருபவளே
பிரமனின் உருவாய் பிரபஞ்சம் காப்பவளே
பிரமனின் ஆனந்தமாய் பிரகாசம் கொண்டவளே
சக்தியை விரும்பிடும் சாகச அன்னையே
உக்தியான மொழியாய் உருமாறி நிற்பவளே
சிறப்பான படைகள் சிங்காரி கொண்டாளே
இறப்பின்றி பிறப்பின்றி எங்கும் நிறைந்தவளே!

681-690
ஆனந்தமாய் அனைவரும் ஆராதிக்க தகுந்தவளே
ஆனந்தமாய் நல்லருளை அனைவருக்கும்
அருள்வாளே
எளிதில் அடையலாமே இனிமை பெறலாமே
அளிக்கும் அரசர்கள் அனைவருக்கும் அரசியே
அரண்மனை சுகத்தை அனைவருக்கும் அளிப்பாளே
அரண்மனை வாழ்வை அனுதினம் இரசிப்பவளே
ஓடியாடி கருணையை ஒளியாக்கி சுடர்பவளே
நாடியவரை ராஜபீடத்தில் நளினமாய்
அமர்த்துபவளே
வளமை தரும் வளமான இலக்குமியே
இளமையுடன்  சொத்தை இரட்சித்துக் காப்பவளே!

691-700
நான்கு படைகளுக்கு நாயகித் தலைவியே
வான்புகழ் அரசை வையத்தில் அளிப்பவளே
உடையில் சத்தியத்தை உருவாய்க் கொண்டவளே
இடையில் சமுத்திரங்கள் இனிதாய் சூழ்ந்தவளே
அக்னியில் தியாகங்கள் அருளிட செய்பவளே
வக்கிர எதிரியை வாகாய் அழிப்பவளே
உலகம் முழுதும் உள்ளுக்குள் அடக்கியவளே
பலருக்கும் வளங்களை பதமாய் அருள்பவளே
கதிரவன் போலவே காந்தமாய் ஒளிர்பவளே
உதிக்கும் மெய்யாய் உலகைக் காப்பவளே

701-710
நாடென்று ஒன்றும் நவிலாத நங்கையே
வீடென்று எங்கும் வியாபித்து இருப்பவளே
எல்லாம் தன்பால் இழுக்கும் சக்தியே
எல்லா கலைக்கும் இயல்பான அரசியே
விஞ்ஞானம் தனை விளங்க வைப்பவளே
அஞ்ஞானம் நீக்கி ஆழ்மனதில் அமர்ந்தவளே
உருவம் இன்றி ஒளிந்து காப்பவளே
ஒருவித கோட்பாடும் இல்லாது இருப்பவளே
எப்போதும் சிவனின் இடபாகம் இருப்பவளே
தப்பாது சடங்கை தயங்காது நடத்துபவளே!

711-720
மனிதரைக் காக்கும் மகத்தான அப்பாவியே
இனிதாய் ‘ஈ’ யெனும் எழுத்தில் இருப்பவளே
வணங்கும் ஆசானின் வையகம் ஆனவளே
உணர்வுகள் அப்பாற்பட்டு உயர்ந்து நிற்பவளே
அண்ட வெளியில் அடிபணிய வைப்பவளே
மண்டலத்தில் மறைந்த மாயை ஆனவளே
முற்றும் துறந்த முதிர்ந்த தியானமே
சுற்றும் உலகின் சுடரொளி ஆனவளே
பூதகணங்கள் வணங்கும் புவனேஸ்வரி தாயே
பாதகமலம் கொண்டு பாதையெங்கும்
நிறைந்தவளே!

721-730
அழகான கால்களை அங்கமாய்க் கொண்டவளே
பழகிடும் ஆசானைப் பாங்காய் நேசிப்பவளே
சுதந்திரமாய் எங்கும் சுற்றி அருள்பவளே
இதமாய்த் தந்திரங்கள் இயல்பாய் செய்பவளே
ஆசானாய் இருந்து அண்டம் காப்பவளே
பாசாங்கு இன்றி பக்தர்களால் பூஜிக்கப்படுபவளே
அறிவை அனைவருக்கும் அளித்துக் காப்பவளே
செறிவாய்ச் சிறந்து சிறுதுரும்பிலும் இருப்பவளே
இன்பத்தின் விளைவாய் இனிமை தருபவளே
அன்பின் உருவாய் அமைதியின் சிகரமே!

731-740
பிரிய மானதை பிறருக்கு செய்பவளே
அறிவால் நாமங்கள் ஆயிரத்தை இரசிப்பவளே
நந்தியின் மூலம் நல்வித்தைகள் கற்றவளே
அந்திப் பொழுதில் ஆடிடும் ஈஸ்வரியே
மாயை உலகின் மகத்தான அதிசயமே
மாயை விலக்கிடும் மனதின் முக்தியே
முக்தியின் உருவமாய் முழுமுதற் கடவுளே
பக்தியின் உருவமாய் பாதங்கள் நளினமே
இசையையும் நடனத்தையும் இணைக்கும் பாலமே
அசையும் பொருளான அமைதி உருவமே!

741-750
தேவ கன்னிகை தொழுதிடும் அன்னையே
பாவ வாழ்வில் பரவசத் தேனே
எழுந்த  பாவங்களை எரித்திடும் தீயே
விழுந்திடும் அவலப்பஞ்சை வீழ்த்திடும் புயலே
முதுமையின் கோலத்தை முறியடிக்கும் கதிரே
பதுமையாய்க் கடலை பார்த்திடும் நிலவே
ஆடும் மயிலுக்கு ஆனந்தம்தரும் முகிலே
வாடும் நோய்தீர்க்க வந்திடும்  சுடரே
மரணத்தை முறியடிக்கும் மகா சக்தியே
வரங்களைத் தந்தருள வந்திடும் பராசக்தியே!

751-760
மகத்துவம் உடைய மந்திர காளியே
மகத்துவம் உடைய மயக்கும் மதுவே
கலையாய் உண்டு களிக்கும் அமுதே
இலையும் உண்ணாத எழிலான தவமே
சினத்தின் உருவாய் சீறி எழுபவளே
கணத்தில் அசுரனை  காலடியில் அழித்தவளே
எவராலும் அழிக்க என்றுமே முடியாதவளே
தவறை மன்னித்து தாரணி காப்பவளே
அகிலத்தை ஏந்தி அண்டம் காப்பவளே
அகிலத்தில் தருமத்தை ஆனந்தமாய் தருபவளே!

761-770
முகத்தைக் கண்டால் முறுவலிக்கும் இனிமையே
முகத்தில் தோன்றிய முக்கண்களும் அழகே
மூன்று குணங்கள் முதன்மையாய் உடையவளே
வென்று பரலோகம் சென்றிட வழியானவளே
சுத்தத்தின் வடிவாய் சுகந்தம் தருபவளே
புத்தம் புதிதாய் பூத்திடும் செம்பருத்தியே
விறுவிறுப்பு கூடிய வீரியம் வாய்ந்தவளே
சுறுசுறுப்புத் தந்திடும் சுடரொளி வெளிச்சமே
உவந்து செய்திடும் உத்தம யாகமே
தவத்தை விரும்பிடும் தாயாய் ஆனவள!

771-780
தலைவணங்க கிடைக்காத தகதகக்கும்
அற்புதமே
விலைகொடுத்து உலகில் வெல்ல முடியாதவளே
பாடலி மலரினை பாசமுடன் விரும்புபவளே
மாடத்தில் அமர்ந்த மகத்தான மங்கையே
சுந்தரியாய் மேருமலையில் சுகமாய்த்
தங்கியவளே
மந்தார மலரை மனதார விரும்புபவளே
வீரர்கள் வணங்கிடும் வீராங்கனை அன்னையே
தாரகை சூழ்ந்த தரணியின் அழகே
குற்றம் இல்லாத குலதெய்வத் தாயே
வெற்றியுடன் எங்கும் வீற்றிருக்கும் முகமே!

781-790
உள்ளிருந்து நோக்கினால் உடனே தெரிபவளே
கள்ளமில்லா வானமாய் காட்சி தருபவளே
ஆன்மாவை நமக்கு அருளித் தருபவளே
ஆன்மாவாய் மாறி அகத்துள் உறைபவளே
மார்த்தாண்ட பைரவர்கள் மகிமையுடன் தொழுபவளே
கோர்வையாய் மந்த்ரினிக்கு கூதூகலம் அருளியவளே
மும்மூன்று நகரங்களின் முதன்மை அரசியே
செம்மையாய் வென்றிடும் சேனைகள் உடையவளே
வெள்ளை குணங்களுடன் விரிந்து இருப்பவளே
உள்ளும் வெளியுமாய் உறைந்து கிடப்பவளே!

791-800
உண்மை, அறிவு, உள்ளக்களிப்புத் தருபவளே
தண்மை அமைதியைத் தந்து நிற்பவளே
அலையான கூந்தலுடைய ஆண்டவன் பத்தினியே
கலையை மாலையாய் கழுத்தில் அணிந்தவளே
கருவின் ஆசைகளை களிப்புடன் தீர்ப்பவளே
உருவத்தின் மாயையில் ஒளிந்து இருப்பவளே
கலைகளின் பொக்கிஷமாய் காட்சித் தருபவளே
விலையில்லா எழுத்தின் வினயமான வடிவமே
கண்களால் கலையைக்  களிப்புடன் இரசிப்பவளே
மன்கவர் கலைகளின் மகத்தான அரசியே!

801-810
சத்தான உணவுடன் சௌக்ய ஆரோக்யமே
புத்தம்புது பூவாய் பூத்திடும் பழமையே
வணங்கி தினமும் வழிபாட்டுக் குகந்தவளே
கணப்பொழுதில் மனதிற்கு களிப்பைத் தருபவளே
தாமரை விழிகளால் தரணியைக் காப்பவளே
சாமத்திலும் ஒளிரும் சௌபாக்ய விளக்கே
இறுதியில் காலத்தில் இளைப்பாறும் ஓய்வே
உறுதியாய் நின்றிடும் ஓங்கார அணுவே
சிறப்புக்கும் சிறப்பான சிங்கார சக்தியே
பிறப்பின் பாசக்கயிற்றை பிடித்திட்ட கரமே!

811-820
பாசத்தின் பிணைப்பை பாந்தமாய் அறுப்பவளே
மாசறு வித்தையில் மந்திரம் உடைப்பவளே
உருவத்தின் அழகாய் உயர்ந்து நிற்பவளே
உருவமே இல்லாது உறையும் அருவமே
அணிகளால் பூஜிக்க ஆனந்தம் கொள்பவளே
முனிவரின் மனக்கடலில் முளைத்திடும் அன்னமே
பொய்யே இல்லாத பொலிவான பேச்சே
மெய்யே உருவாய் மேவிய வடிவமே
அனைத்து பொருட்களிலும் அடங்கிய பொருளே
மனைவியாய் இவ்வுலகில் மகத்தான
பதிவிரதையே!

821-830
அண்டத்தை உருவாக்கும் ஆக்கசக்தி ஆனவளே
அண்டத்தை உருவாக்கும் அதிசய பிரம்மமே
அனைத்து உயிருக்கெல்லாம் அன்னையாய்
ஆனவளே
அனைத்து உருவத்திலும் அடங்கிய பெருமையே
ஞானத்தில் வணங்கப்பட்டு ஞாலம் காப்பவளே
மோனத்தில் பிறந்திடும் மோகன உலகமே
சிந்தையை பாதிக்கும் சினமான சித்திரமே
விந்தையாய் உலகை விரலில் அடக்குபவளே
மந்திரத்தால் கட்டுண்டு மகிமை வாய்ந்தவளே
தந்திரம் இல்லாது தரணியில் தெரிபவளே!

831-840
அமைதியான ஆன்மாவின் அழகிய கடவுளே
சுமையில்லா ஆன்மாவை சுகமாய்த் தருபவளே
ஐம்பது பீடங்களில் அமர்ந்த சக்தியே
தாம்புச் சங்கிலியும் தகர்க்கும் சக்தியே
தனிமையிலும் தெரியும் தாரக மந்திரமே
இனிதாய் வீரரை ஈந்திடும் அன்னையே
விண்வெளியை படைத்து வெளிச்சம் தருபவளே
விண்ணிலே முக்தியை வினயமாய்த் தருபவளே
மெய்யான வாழ்வில் மோட்சமாய் இருப்பவளே
மய்யமாய் நின்ற மகிமையான மூலமே!

841-850
மனதின் ஆசைகளை மறைவில் அறிபவளே
இனபெருக்கின் குற்றத்தை இனிதாய் ஒழிப்பவளே
உழன்றிடும் பிறவியை உருவாக்கும் காரணமே
சுழன்றிடும் உலகின் சூத்திர வேதமே
புவியின் பழைய புராணத்து மகிமையே
தவிக்கும் வாழ்வில் தரமான மந்திரமே
மெல்லிய இடையுடன் மேனியைக் கொண்டவளே
துல்லிய புகழுடன் தோற்றம் உடையவளே
முழுதான புகழை முற்றிலும் பெற்றவளே
எழுத்துக்களின் உருவமாய் எங்கும் நிறைந்தவளே!

851-860
பிறப்புக்கும் மூப்புக்கும் பிணிக்கும் நிவாரணியே
சிறப்பாக உபநிடதம் சேவிக்கும் வர்ணனையே
உளமறியும் அமைதியை உயர்ந்த கலையே
அளவிட முடியாத ஆழமான சக்தியே
வானில் அமர்ந்த வாணியாய் ஆனவளே
தேனில் வண்டாகி தெவிட்டாத கர்வமே
இசையை விரும்பும் இனிய நாயகியே
விசையறு மனமும் விவரிக்க முடியாதவளே
முடிவே இல்லாத முக்தியின் எல்லையே
விடிவாய் பாவங்களை வீழ்த்திடும் தாயே!

861-870
கயல்விழி பாதியாய் கணவனுக்கு ஆனவளே
செயலுக்கும் காரணத்திற்கும் சிந்தைக்கும்
அடங்காதவளே
கடலின் அலையாய் கலையும் ஆனவளே
உடலில் நகைகள் ஒய்யாரமாய் மினுக்குபவளே
சிறப்பு நாடகத்தில் சீராக நடிப்பவளே
பிறப்பே இல்லாத பெருமை உடையவளே
இறப்பு என்பதே இல்லாமல் இருப்பவளே
சிறப்பான அழகுடன் செழித்து விளங்குபவளே!
எளிதில் மனமிரங்கி எம்மைக் காப்பவளே
குளிரும் எண்ணங்களில் கும்பிடப்படும் தெய்வமே!

871-880
புதிராய் வெளிப்புறப் புலன்களுக்குத்
தெரியாதவளே
மதிக்கு வேதத்தில் மந்திரமாய் ஆனவளே
மூன்று நிலைகளிலும் முக்கியம் கொண்டவளே
மூன்று நிலையாய் முறுவல் புரிபவளே
திரிபுர சுந்தரியே திருஉருவம் கொண்டவளே
அறியாத  நோய்கள் அறவே இல்லதவளே
உரமாய் ஏதுமில்லாது உறுதியான துணையே
புறமின்றி தன்னுள்ளேப் பொலிவு படைத்தவளே
இறப்பே இல்லாத இனிய தேனமுதே
உறவெனும் மாயை உணர்வை விடுவிப்பவளே!

881-890
யாகத்தை விரும்பும் யௌவன விலாசினியே
யாகத்தை நடத்தும் யாகக் காரிணியே
கருமமாய்  யாகத்தைக்  கருத்துடன் செய்பவளே
தருமத்தின் நாயகியாய் தாரணியைக் காப்பவளே
செல்வத்தின் தேவியாய் செழிப்புடன்
விளங்குபவளே
செல்வமும் தானியமும் செழுமையாய்
வளர்ப்பவளே
வேதத்தைப் படிப்பவரை விரும்பிடும் தாயே
வேதத்தை படிக்கும் வித்தையைத் தருபவளே
உலகம் சுழன்றிட உற்சாகம் தருபவளே
உலகத்தை அடக்கி உள்ளங்கையில் கொண்டவளே!

891-900
முத்தின் மினுமினுப்பை முகத்தில் கொண்டவளே
வித்தாகி விரிந்த விஷ்ணுவின் சக்தியே
உலகில் விஷ்ணுவின் உருவமாய் ஒளிர்பவளே
உலகிலே பிறப்பிடம் உடையாது நிற்பவளே
அனைத்திற்கும் காரணம் ஆனவளாய் நிற்பவளே
வினைகளை அகற்றி விசையாகும் திடமே
நற்குலத்தின் உருவமாய் நளினம் நிரம்பியவளே
பற்பல வீரர்களை பாந்தமாய் விரும்புபவளே
தயங்காது வீரம் தாராளமாய்க் கொண்டவளே
செயலும் பலனும் சிந்தையில் கொண்டவளே!

901-910
ஒலியின் வடிவான ஓங்கார உயர்வே
கலியில் அறிவியலைக் கண்முன் நடத்துபவளே
கலையில் சிறந்து காட்சி தருபவளே
மலையரசன் மகளாய் மகத்துவம் வாய்ந்தவளே
ஆயிரமிதழ் தாமரையில் அமர்ந்து இருப்பவளே
ஆயிரம் சுடருடன் அறிவியலை மிஞ்சியவளே
இயங்கா வியலையும் இயங்க வைப்பவளே
மயங்கிடும் மனதின் மாய நிலையே
இசையை விரும்பி இனிமை பொங்குபவளே
அசையும் அழகாய் அமைதி நிலவே!

911-920
சிவனை எப்போதும் சிந்தையில் கலந்தவளே
தவத்தில் தெரியும் தந்திர உயிரே
தடையாகும் ஆபத்துகளை தரணியில் போக்குபவளே
விடையாய் தன்னுள்ளே வித்தைகள் கொண்டவளே
இனிமையான அமுதமாய் இதங்களைத் தருபவளே
தனியளாய் எப்போதும் தைரியம் உடையவளே
பத்திர தைரியசாலி பண்டிதர்களால்
அர்சிக்கப்படுபவளே
சித்ரூபமான அர்க்யத்தால் சிந்தையில்
ஆரதிக்கப்படுபவளே
உள்ளத்து நினைவுகளை உளமார விரும்புபவளே
நல்லவர்கள் மனதில் நலமாய் பிரகாசிப்பவளே!

921-930
எப்போதும் ஆனந்தம் எழிலாய் உடையவளே
தப்பாத இளங்காலைத் தளிரான செங்கதிரே
அறிவோடு வணங்க அறியாமை தீர்ப்பவளே
செறிவான நிலவாய் சிரிக்கும் கமலமே
குணமாய் சமநிலை குறையின்றிக் கொண்டவளே
கணக்கில்லா அளவில் கைவல்யம் செய்பவளே
துதிகளை விரும்பிடும் தூய்மை உடையவளே
துதிக்கும் மனதின் துயரம் போக்குபவளே
மடமை போக்கிடும் மறைகள் போற்றுபவளே
திடமான மனதுடன் திவ்யமாய் இருப்பவளே!

931-940
இதமாய்ப் பெரிய இதயம் உடையவளே
முதலும் முடிவுமான முழுமுதற்க் கடவுளே
நல்லது மட்டுமே நவிலும் நாயகியே
எல்லோருக்கும் அன்னையாய் எழிலாய் இருப்பவளே
சிகரத்தில் உலகைத் சிரமமின்றி தாங்குபவளே
அகலமான விழிகளால் அகிலம் காப்பவளே
வீரியம் கொண்டு வித்தைகள் செய்பவளே
தைரியம் கொண்டு தாண்டவம் ஆடுபவளே
சிறந்ததை கொடுத்து சிந்தை கவர்பவளே
சிறப்பான சுகத்தை செழிப்பாய்த் தருபவளே!

941-950

பாசமாய் மனதுள் படர்ந்து இருப்பவளே
கேசமாய் வானம் கொண்டையில் கொண்டவளே
உயரத்தில் இருக்கும் ஓங்கார ரூபிணியே
மயக்கிடும் இந்திர மகாராணியாய் அமைந்தவளே
ஐந்து இடவிரல்களுக்கும் ஐயம்தீர் கடவுளே
ஐந்து யாகங்களை ஐயமற விரும்புபவளே
ஐந்து பிரேதங்களில் அணிவகுப்பாய் அமர்பவளே
ஐந்து பிரமத்தின் ஆக்கக் கடவுளே
ஐந்து பூதங்களின் அழகான தலைவியே
ஐந்து பொருட்களால் அலங்கரிக்கப் படுபவளே!

951-960
நிரந்தர உருவமாய் நின்று காப்பவளே
நிரந்தர செல்வம் நித்தம் தருபவளே
தயக்கமின்றி மகிழ்வை தாரளமாய்த் தருபவளே
மயக்கி அழகால் மகேசனைக் கவர்ந்தவளே
தலையில் பூமியைத் தாங்கி நிற்பவளே
மலைக்கு அரசனின் மகளாய்ப் பிறந்தவளே
கருவினில் செல்வத்தைக் காத்துத் தருபவளே
தருமத்தை விரும்பும் தாட்சாயிணித் தாயே
தருமத்தை வளர்த்து தரணியைக் காப்பவளே
உருவத்தில் ஒய்யார உலகை வென்றவளே!

961-970
குணங்களில் பெருமை கொண்டு சிறந்தவளே
கணங்கள் எல்லாம் கடந்து நிற்பவளே
அமைதியின் உருவாய் அகிலத்தில் நிறைந்தவளே
இமையை விரிக்கும் பந்தூக மலரே
இளமை பொருந்திய எழில் வடிவமே
வளமையாய் விளையாடி வசந்தம் தருபவளே
சுகங்களைத் தந்திடும் சுமங்கலித் தாயே
சுகத்தைத் தந்து சோகம் தீர்ப்பவளே
சுகமாய் அழகைச் சுமந்து நிற்பவளே
சுகந்தமுடன் அழியா சுந்தரன் மனைவியே!

971-980
மணந்த மங்கையர் வணங்கப் பிடித்தவளே
மனத்தைக் கவரும் மருவில்லா மினுமினுப்பே
சுத்தமான இதயம் சுமந்து நிற்பவளே
வித்தையாய் சக்கரத்தில் வீற்றிருக்கும் தாயே
முன்னின்று உலகில் முதலாய் ஜனித்தவளே
தன்னிச்சையாய் மூன்று தலைநகர் தாயே
முத்திரை வடிவில் மூலமாய் நின்றவளே
எத்தனை வடிவாகி எங்கும் நிறைபவளே
அறிவின் முத்திரை ஆகி நிற்பவளே
அறிவால் அடைந்திடும் ஆதி பராசக்தியே!

981-990
எண்ணத்தின் வடிவாகி எண்ணமும் ஆனவளே
திண்ணமாய் ஆனந்தம் திகட்டாது தருபவளே
மூன்று உலகிற்கும் முழுமுதற் கடவுளே
மூன்று குணங்களாய்  மூவுலகம் காப்பவளே
அன்பால் அனைவரையும் அணைக்கும் அம்மாவே
தன்பால் அனைவரையும் தாங்கிடும் முக்கோணமே
தீயவை தீண்டாத தெய்வமாய் நின்றவளே
மாயத்தின் மயக்கத்திலும் மாறாத சரித்திரமே
விரும்புவதை தந்து வினைகள் தீர்ப்பவளே
கருத்தும் பயின்றிட  காட்சி தருபவளே!

991-1000
ஆறுவழி முறைகளுக்கும் அணுகாது நிற்பவளே
காருண்யம் கொண்டு களங்கம் தீர்ப்பவளே
அறியாமை இருட்டை அகற்றிடும் ஒளியே
தெரியாமல் வணங்கினாலும் தெளிவைத்
தருபவளே
அடிபணிய வைத்து அருளைச் சொரிபவளே
வடிவழகாய் திருச்சக்கரத்தில் வாசம் புரிபவளே
மூவுலக நாயகியாய் மூலமான சுந்தரியே
யாவும் நடத்திடும் யௌவன அமைதியே
சிவனும் சக்தியும் சேர்ந்த உருவமே
அவனியில் எளிதாய் அணைக்கும் அன்னையே!

*****

நாவினால் பாடும் நாமங்கள் ஆயிரமே
தேவியின் புகழைத் தெளிவாய்ச் சொல்லுமே
வாயினால் பாடும் வார்த்தைகளின் கற்பகமே
ஆயிரம் நாமங்களிலும் அடங்காத அற்புதமே
கோர்த்த பாமாலைக்  கொலுவினில் இருப்பவளே
வார்த்தைகளில் விளையாடி வரங்களைத்
தருபவளே
போற்றுவார் போற்றல் பொன்னரசியைச் சேருமே
ஆற்றும் பணியாவும் அவளையே அணுகுமே
பரம்பொருளான பார்வதியைப் பணிந்து இங்கு
வரத்திருமகள் செய்திடும் வந்தனம் இதுவே ....